1744

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை – 2017

| தரம் - 8 | குடியியற்கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

### பகுதி I

❖ முதலாம் வினா தொடக்கம் இருபதாம் வினா வரையுள்ள பல்தேர்வு வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1. பிரித்தானிய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட சேவை
   1) கல்விச்சேவை  2) சுகாதார சேவை  3) தந்திச்சேவை  4) கூட்டுறவுச் சேவை

2. தனித்தனியே பெற்றுக்கொள்ள முடியாத சேவை
   1) கல்வி  2) மின்சாரம்  3) சுகாதாரம்  4) பலநோக்கு கூட்டுறவு

3. இலங்கை மலேரியா நோயை முற்றாக ஒழித்த நாடு என பிரகடனப்படுத்திய அமைப்பு
   1) உலக சுகாதார தாபனம்  2) ஐக்கிய நாடுகள் சபை
   3) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்  4) சுகாதார அமைச்சு

4. "அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை" என அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை
   1) 9500  2) 8000  3) 7500  4) 7000

5. மௌனமாக இருத்தல், உதடுகள், கை, கால்கள் நடுங்குதல் போன்ற மனவெழுச்சி
   1) மகிழ்ச்சி  2) கோபம்  3) துக்கம்  4) பயம்

6. மக்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளலும், மதித்தலும் உள்ள தலைமைத்துவம்
   1) ஜனநாயகத் தலைமைத்துவம்  2) சர்வாதிகார தலைமைத்துவம்
   3) முறைகேடான தலைமைத்துவம்  4) பெயரளவிலான தலைமைத்துவம்

7. பண்பாடு பற்றி வரைவிலக்கணங்களை முன்வைத்தவர்கள்
   1) அரசறிவியாளர்கள்  2) புவியியலாளர்கள்  3) பொருளியிலாளர்கள்  4) மானுடவியலாளர்கள்

8. இலங்கை தமிழர் சனத்தொகையின் சதவீதம்
   1) 74.9%  2) 12.6%  3) 11.2%  4) 9.3%

9. "மனிதனால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்டுள்ள அறிவு நம்பிக்கை, கலாசாரம், பழக்கவழக்கம், வாழ்க்கை முறை" அனைத்தும்
   1) உரிமை  2) பண்பாடு  3) சமத்துவம்  4) கடமை

10. அரசினாலும், அரசார்பற்ற தொண்டர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் அடங்காதவை
    1) வீட்டு கூட்டுறவுச் சங்கம்  2) கிராமிய எழுச்சி வேலைத்திட்டம்
    3) முதியோர் பராமரிப்பு இல்லம் நடாத்தல்  4) சிரேஷ்ட பிரஜைக்கான வேலைத்திட்டம்



kalvi.lk

11. புத்தபெருமானின் பிறப்பு, ஞானம் பெறல், பரிநிர்வாணமடைதல்

1) செவ வைபவம் 2) வெசாக் வைபவம் 3) நோன்பு வைபவம் 4) பொசொன் வைபவம்

12. இயேசு சிலுவையில் அறைந்த நிகழ்வை, நினைவூட்டுவது

1) உயிர்த்த ஞாயிறு 2) சாம்பல் புதன் 3) பெரியவெள்ளி 4) பாஸ்கா

13. கடவுளின் குழந்தையாக செய்யும் சமயநிகழ்வு

1) அடக்கம் செய்தல் 2) பரிநிர்வாணம் அடைதல்
3) திருமண சடங்கு 4) ஞானஸ்தானம் பெறல்

14. காலநிலை மற்றும் வானிலை மாற்றத்தால் ஏற்படும் அனர்த்தம்


1) காட்டுத்தீ 2) சுனாமி 3) புவிநடுக்கம் 4) நிலச்சரிவு

15. அயனக்காலநிலை வலயங்களில் மிக வேகமாக உருவாகி பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் அனர்த்தம்

1) சுனாமி 2) சூறாவளி 3) எல்னினோ 4) லானினோ

16. இலங்கையில் 2016ம் ஆண்டு ஏற்பட்ட நிலச்சரிவில் பாரிய அளவில் அழிவுக்கு உட்பட்ட மாவட்டம்

1) கேகாலை 2) மட்டக்களப்பு 3) மாத்தளை 4) கொழும்பு

17. 

இந்த படத்தில் காட்டும் வீதிக் குறியீடு

1) முன்னால் நிறுத்தவும் 2) முன்னால் பாதையில் வேலை நடைபெறுகின்றது
3) முன்னால் வழிவிடவும் 4) முன்னால் சுற்றுவளைவு

18. வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு மனித தவறுகள் காரணமாக இருக்கும் சதவீதம்

1) 85% 2) 50% 3) 25% 4) 15%

19. பொலிஸ் அவசரப்பிரிவுக்கு அவசரமாக மக்கள் முறையீடு செய்வதற்கு உரிய தொலைபேசி இலக்கம்.

1) 110 2) 118 3) 1919 4) 119

20. மாவட்டத்திற்கு பொறுப்பான அதிகாரி

1) பிரதேச செயலாளர் 2) அரசாங்க அதிபர் 3) அமைச்சர் 4) மேஜர்

(20X2=40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.

1. இரண்டாம் தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை இரண்டினை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. க்ணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. இக்கணிப்பீட்டை மேற்கொண்டதால் நீர் பெற்ற நன்மைகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
4. கணிப்பீட்டை மேற்கொள்ளுவதற்கு நீர் பயன்படுத்திய நூல்கள் நான்கு தருக? (4 புள்ளிகள்)

02.

1. இலங்கையில் சுகாதார சேவையின் அடிப்படை செயற்பாடுகள் இரண்டு தருக. (2 புள்ளிகள)
2. தற்பொழுது இலங்கையில் பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இரண்டு நோய்களைத் தருக. (2 புள்ளிகள்)
3. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலர்கள் உங்கள் பிரதேசத்திற்கு வழங்கக்கூடிய சேவைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
4. உமக்கு தெரிந்த தொற்றா நோய்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

03.

1. குடும்பத்தின் பிரதான வகை இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து செய்யும் செயற்பாடுகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
3. பாடசாலையில் காணப்படும் ஜனநாயகப் பண்புகள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
4. சிறுவர்களுடைய உரிமைகள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

04.

1. மகிழ்ச்சி என்னும் மனவெழுச்சியின் விளைவுகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. மனதை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சிகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
3. உமக்கு தெரிந்த ஆக்கச் செயற்பாடுகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
4. தலைவர் ஒருவரிடம் காணப்படும் பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

05.

1. பண்பாடு பற்றி வரைவிலக்கணம் வழங்கிய இரு அறிஞர்களின் பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)
2. பல்பண்பாட்டு சமூகங்களை கொண்ட நாடுகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
3. பல்பண்பாட்டு சமூகத்தில் வாழுபவர்கள் பின்பற்ற வேண்டிய குணவியல்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
4. இலங்கையில் பல்பாண்பாட்டை வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

06.

1. இயற்கை அனர்த்தங்கள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
3. அனர்த்தத்தின் பொழுது பயன்படுத்தக் கூடிய பொருள்கள் நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
4. அனர்த்தம் பற்றி உதவி பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

07.

1. சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. சுனாமியின் போது அழிவுகள் ஏற்படக்காரணமாக இருக்கும் மனித செயற்பாடுகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
3. சுனாமியினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை (இழிவழவாக்குதல்) குறைப்பதற்கான வழிமுறைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
4. 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

## ONLINE CLASSES - 2025

# May NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**